பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

43 | சென்னை—ஞாயிறு, பிப்ரவரி 2, 1947. [ விலை அணா 2

## பிறர்க்காகத் துன்பப்படும் தவம்

ஏசு கிருஸ்து தம்மைப்பற்றிய விசாரணைக்காக ஜெரூஸலத்துக்கு புறப்பட்டுப் போனபொழுது அவர் முதலில் போனார். அவருடைய சிஷ்யர்கள் அவருக்குப் பின்னால் நடந்து போனார்கள். அப்பொழுது அவருடைய முகத்தைக்கண்டு அவர்கள் ஆச்சரியமும் அச்சமும் அடைந்தார்கள்.

சாதாரணமாக காணப்படும் ஏசுவின் படங்களெல்லாம் அவரை சாந்தமானவராகவும் குழந்தைகளுடன் உட்கார்ந்திருப்பவராகவும் ஆட்டுக்குட்டியைத் தோளின்மேல் சுமந்து செல்பவராகவுமே சித்தரித்துக் காட்டுகின்றன. ஹரோல்டு காபின் என்பவர் வரைந்துள்ள படத்தில்தான் ஏசுவின் மனவுறுதியைக் காண முடிகின்றது. அந்தப் படத்தில் ஏசுவின் முகம் டாகூர் முகம்போல் கணப்படுகிறது. ஆனால் ஏசுவின் கண்களில் ஜொலிக்கும் மனவுறுதியைக் கவனித்தால் பிறருடைய துன்பத்தை நீக்குவதற்காகத் தனியாக துன்பத்தை மேற்கொண்டுள்ள தவ சிரேஷ்டரான காந்தியடிகளுடைய ஞாபகமே வருகின்றது.

காந்தியடிகள் தனியாக நவகாளி ஜில்லாவிலுள்ள வயற்காடுகளில் நடந்து போய்க்கொண்டிருக்கிறார். அவர் தம்முடைய கொள்கையை மட்டுமின்றி தம்முடைய சிஷ்யர்களையும் மகத்தான சோதனைக்குட்படுத்தி இருக்கிறார். அந்த நாளில் ஏசுவை சிலுவையில் அறைந்தார்கள். ஆயினும் அவர் மனம் தளரவில்லை. அதுபோல் காந்தியடிகளுக்கும் சகிக்கமுடியாத துன்பங்கள் ஏற்படலாம். ஆனால் அவரும் மனம் தளரமாட்டார். ஏனெனில் இருள் காணப்பட்டாலும் அதன் பின்னால் இருந்துகொண்டு இறைவன் தன்னுடைய பக்தர்களைக் காப்பாற்றி வருகிறான்.

ஆனால் அவருடைய சிஷ்யர் என்று சொல்லிக்கொள்ளும் நம்முடைய நிலைமை என்ன? கிருஸ்து சிலுவையிலேறி துன்பத்தை ஏற்றுக்கொண்டார். ஆனால் அவருடைய சிஷ்யர்களோ துன்பத்திற்கஞ்சி அவரை விட்டு ஓடிவிட்டார்கள். நாமும் அப்படியே தான் நடக்கப் போகிறோமா? சுதந்திர இயக்கத்தை நடத்தும்பொழுது அவருடைய சிஷ்யர்கள் என்று சொல்லி நாம் பெருமையடித்துக் கொண்டோம். சிறைக்குப் போய் வந்தால் பெரிய பதவி கிடைக்குமென்று எண்ணினோம். ஆனால் சுலபமான பலாத்காரப்பாதையை விட்டுவிட வேண்டுமென்றும் பதவி மோகத்தைத் துறந்துவிட வேண்டு மென்றும் தோல்வி வந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இந்தத் தனி மனிதர் கூறும்பொழுது அந்த விதமாக நடக்க நமக்கு மனோதைரியமிருக்கிறதா? நாம் அதற்காக நவகாளிக்கு ஓடவேண்டியதில்லை. ஹிந்து, முஸ்லிம் என்னும் வேற்றுமையையும் ஜாதிஹிந்து, ஹரிஜன் என்னும் வேற்றுமையையும் கிருஸ்தவன் கிருஸ்தவனல்லாதவன் என்னும் வேற்றுமையையும் துறந்துவிடத் தயாராக இருக்கிறோமா? என்பதே கேள்வி. இந்தச் சமயத்தில் நாமும் கீழ்க்கண்டவாறு பிரார்த்தனை செய்ய வேண்டும் :—

"இடை விடாமல் துன்பப்படும் மனித சாதிக்காக துன்பத்தை ஏற்று நடக்கும் தெய்வீக ரக்ஷகரே! உம்முடைய ஊழியர்களாகிய நாங்கள் உம்மை அழுத்தும் பாரத்தில் ஒரு சிறு பகுதியை [illegible]னும் எங்கள் பலவீனமான கைகளால் தாங்குவதற்கு ஆற்றல் அருளும்படி பிரார்த்திக்கின்றோம்.

நீர் துன்பத்தின் மூலம் உலகத்தை ரக்ஷிக்க முனைந்திருக்கிறீர். இந்த ரகசியத்தை எங்களுக்கும் காட்டியருளும். நீர் அனுபவிக்கும் துன்பத்தில் ஒரு சிறு பகுதியை நாங்களும் அனுபவிக்க எங்களுக்கு மனோதைரியத்தை ஈந்தருளும். நீர் பட்டினி கிடப்போரிடமும் நோயுற்றோரிடமும் காணப்படுகின்றீர். அவர்களுக்குச் சேவை செய்வதின் மூலம் உமக்குச் சேவை செய்ய எங்களுக்கு அறிவைக் கொடுத்தருளும்."

எஸ். கே. ஜார்ஜ்.

## அமெரிக்க நண்பருடைய எச்சரிக்கை

நம்முடைய ஜனங்கள் அறிவில்லாமல் பிறரைப் பார்த்து நடந்து கெட்டுப் போகிறார்கள். அதிலும் கூட பிந்தி விடுகிறார்கள். மேனாட்டார் கையாண்டு விட்டு விட்டதை இவர்கள் கைக்கொள்ள ஆரம்பிக்கிறார்கள். அது போல் தான் மிஷின் கலப்பை விஷயமும் ரசாயன உர விஷயமும். திரு. ரால்ப் ரிச்சர்ட் கெய்தான் என்பவர் 1943 ஏப்ரல் மாதம் வெளிவந்த "ரூரல் இந்தியா" என்னும் பத்திரிகையில் கூறும் அபாயத்தை நாம் அலட்சியம் செய்துவிடலாகாது. அவர் கூறுவதாவது :—

"அமெரிக்காவில் தென் தகோடா என்னும் பகுதியில் பெரிய காடுகளை அழித்து விட்டார்கள். ஆடு மாடுகளுக்கு வேண்டிய நல்ல புல் காடுகளையும் அழித்து விட்டார்கள். விவசாயிகள் பணம் உண்டாக்குவதற்காக கோதுமையை ஏராளமாகப் பயிர் செய்கிறார்கள். அதிகப் பணம் கிடைத்தவுடன் முதலில் காரும், பிறகு ரேடியோவும், பிறகு மெஷின் கலப்பையும் வாங்குகிறார்கள். மரங்கள் போனதும் மழை குறைந்து விட்டது. புல் போனவுடன் மாடுகள் குறைந்து விட்டன. உரமும் குறைந்து விட்டது. தான்யமாவது நன்றாக விளைந்ததா அதுவுமில்லை. மழையில்லாததாலும் காற்று வீசியதாலும் பயிர்கள் வாடிப் போய் விட்டன. ஆகவே விஷய மறியாத மக்கள் வீணாக பட்டினிக்கு ஆளாயினர். வண்டிகளில் தட்டுமுட்டுச் சாமான்களை ஏற்றிக் கொண்டு எங்கே வேலை கிடைக்கும் எங்கே உணவு கிடைக்குமென்று தேடிப் புறப்பட்டனர். கார்களும் ரேடியோக்களும் மறைந்து விட்டன. ஏழைகள் பணக்காரர்களுக்கு அடிமைகளாகி விட்டனர். இந்த விதம் நாசமாய்ப் போன மேல் நாட்டாரிடமிருந்து இந்தியா கற்றுக் கொள்ளக் கூடியது யாது? அது செய்த தவறை தானும் செய்யாமலிருப்பது தான்."

வி. ஜி. டி.

பேச்சு சுதந்திரம் போன்றவை அரசியல் வைட்டமின்கள்—அமெரிக்க மந்திரி இக்கேஸ்

## பாகிஸ்தான் என்றால் என்ன ?

காந்தியடிகள் ஜனவரி மாதம் 22-ம் தேதி மாலை பனியாலா என்னும் கிராமத்தில் பிரார்த்தனை பிரசங்கம் செய்த பிறகு சில முஸ்லிம்கள் அவரிடம் வந்து சில கேள்விகள் கேட்டார்கள். முதற் கேள்வியாவது :—

"பாகிஸ்தானைப் பற்றித் தங்களுடைய அபிப்பிராயம் யாது? வருங் காலத்தில் அதன் உருவம் எவ்விதமாயிருக்கும்.

காந்தியடிகள் பதில் :—"எந்த மாகாணமாகிலும் பிறருக்குக் கட்டுப்படாமல் சுதந்திரமா யிருக்க விரும்பினால் அது அந்த லட்சியத்தை மனஉறுதியுடன் கடைப்பிடித்து நிற்க வேண்டும். அப்படி நின்றால் அது நிச்சயம் சுதந்திரமடையும். இந்தக் கருத்துடனேயே நான் சென்ற 25 வருஷ காலமாக உழைத்து வருகிறேன். மனவுறுதியோடு சுதந்திரம் தேடினால் அதை வெகு சீக்கிரத்தில் அடைந்து விட முடியும். உதாரணமாக வங்காள மாகாணம் பிறர் தலையீடின்றிச் சுதந்திரமாக இருக்க விரும்பினால் அது ஒற்றுமையாகவும் சகோதர பாவத்துடனும் உழைக்க வேண்டும். அப்படிச் செய்தால் அதை யாரும் சுதந்திரம் அடைய முடியாதபடிச் செய்ய முடியாது. நீங்கள் பாகிஸ்தானைப் பற்றிக் கேட்கிறீர்கள். கராச்சியில் ஒரு பாடசாலைத் திறப்பு விழா சமயத்தில் திரு. எம். ஏ. ஜின்னா பேசி இருப்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நான் அடிக்கடி வற்புறுத்தி வருவது போலவே அவரும் நல்ல குணங்கள் பெறுவது பற்றி வற்புறுத்துகிறார். ஆதலால் நீங்கள் பாகிஸ்தானைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாகவும் உண்மையையும் நியாயத்தையும் கடைப்பிடிப்பவர்களாகவும் இருந்தால் யாரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள். பாகிஸ்தான் என்று சொன்னாலும் சரி வேறு பெயரிட்டு அழைத்தாலும் சரி ஆக்ஷேபனை இல்லை. ஆனால் நீங்கள் அடைய விரும்பும் பாகிஸ்தானில் முஸ்லிம்கள் மட்டுமே தான் இருக்கலாம் என்று கூறுவீர்களேயானால் அது இஸ்லாம் மதத்திற்கு முற்றிலும் விரோதமானதாகும். இஸ்லாம் மதமானது ஜனநாயக தத்துவத்தின் மேலும் சகல மதங்களையும் சமமாக எண்ணுவதின் மீதும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஹிந்துவானாலும் சரி, முஸ்லிமானாலும் சரி, கிறிஸ்துவரானாலும் சரி, மற்றவர்களுடைய மதத்தை துவேஷித்தால் துவேஷிப்பவருக்குக் கேடேயன்றி துவேஷிக்கும் மதத்திற்கன்று.

### பீஹார்

இரண்டாவது கேள்வியாவது :— "தங்களுடைய அஹிம்சையானது பீஹாரில் எவ்வளவு தூரம் பயன் பெற்றிருக்கிறது?

காந்தியடிகள் பதில் :—"பீஹாரில் அட்டூழியங்கள் நடந்த சமயத்தில் என்னுடைய அஹிம்சா தர்மம் பயன்படாமல் போய்விட்டது உண்மைதான். ஆனால் அட்டூழியங்கள் நடந்து முடிந்தபின் என்னுடைய அஹிம்ஸா தர்மம் பயன் அளிக்கவே செய்கின்றது. நான் பீஹார் சர்க்காருடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறேன். அங்கு நடந்த அட்டூழியங்களுக்காக அவர்கள் மனமார பச்சாதாபப் படுகிறார்கள். அவர்கள் தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழிக்க ஒருபொழுதும் முயலவில்லை. அவர்கள் தாங்கள் செய்துவரும் காரியங்களைப் பற்றி எனக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். துன்புறுத்தப்பட்டவர்களுக்குத் தக்க பரிகாரம் செய்ய அவர்கள் எப்பொழுதும் தயாராயிருக்கிறார்கள். பீஹார் மந்திரிகளில் ஒருவர் இங்கே என்னிடம் வந்திருந்தார். கஷ்டத்துக்குள்ளான ஜனங்களுக்கு மறுபடியும் வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கத் தயாராயிருப்பதாக என்னிடம் வாக்களித்தார். அங்குள்ள முஸ்லிம் லீக் தங்கள் குறைகளைப் பற்றி எனக்குக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். பீஹார் சர்க்கார் அங்கு நடந்த சம்பவங்களைப் பற்றி விசாரணை செய்வதற்காக ஒரு பக்ஷபாதமற்ற நீதிமன்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நான் அவர்களுக்கு யோசனை சொன்னேன். அவர்கள் அப்படியே செய்வதாகவும் அந்த நீதிமன்றத்தின் முடிவுகளை ஏற்றுக் கொள்வதாகவும் வாக்களித்திருக்கிறார்கள்.

### கலகத்தின் காரணம்

மூன்றாவது கேள்வியாவது :—"இப்படி சமூகங்களுக்கிடையே கலகங்கள் ஏற்படுவதற்குக் காரணம் யாது?

காந்தியடிகள் பதில் :—"ஹிந்துக்களில் ஒரு பகுதியாரும், முஸ்லிம்களில் ஒரு பகுதியாரும் வெறி கொண்டு விடுவதினால் தான் இத்தகைய கலகங்கள் ஏற்படுகின்றன. ஒரு கக்ஷி நியாயமாகவும் அஹிம்சையாகவும் நடந்து கொண்டால் அடுத்த கக்ஷித் தானாகக் கலகத்தை உண்டாக்கிவிட முடியாது. பம்பாயிலும் மற்ற இடங்களிலும் பழிக்குப் பழி வாங்கும் கொள்கைப் பரிபூர்ணமாக அனுஷ்டிக்கப் பட்டதை நான் பார்த்திருக்கிறேன். ஒரு நாள் ஒரு முஸ்லிம் குத்தப்பட்டால் மறுநாள் ஒரு ஹிந்து குத்தப் படுகிறார். சமூகங்களுக்கிடை ஏற்படும் கலகங்களுக் கெல்லாம் இந்த மனோ பாவந் தான் மூலகாரணமாகும்.

நாம் எல்லோரும் ஒரே மண்ணில் பிறந்த குழந்தைகள். என்னுடைய சகோதரர்கள் யாராவது என்னை தவறாக நடக்கும் அளவு கஷ்டப் படுத்தினால் நான் ஏன் அதற்குக் கீழ்ப் படிந்து நடக்க வேண்டும்? யாரேனும் பலாத்காரமாக மத மாற்றம் செய்யவோ கற்பை அழிக்கவோ முயன்றால் ஏன் அந்த மிருக பலத்தைக் கண்டு அஞ்சவும் அடிபணியவும் வேண்டும்? அத்தகைய பலத்தை அஹிம்ஸா முறையில் எதிர்த்து உயிர் துறக்கச் சித்தமா யிருப்பதே ஒவ்வொருவருடைய கடமையாகும். அடிபணியாமல் அஹிம்ஸா முறையில் எதிர்த்து உயிர் துறக்கக் கூடிய மனவுறுதியுடையவர்கள் இருந்தால் கொடுங்கோலன் தன்னுடைய பலாத்காரச் செயல்களை எவ்வளவு காலம் செய்து கொண்டிருப்பான்? பலாத்காரத்திற்கேற்ற பரிகாரம் பழி வாங்குதலன்று, அஹிம்சையே யாகும். அது தான் சமூக கலகங்களுக்குக் காரணமாயுள்ள வெறியை அழிக்க வல்லதாகும்.

## நேத்தாஜி பிறந்த நாள்

மகாத்மா காந்தியடிகள் ஜனவரி மாதம் 23-ந் தேதி காலை டால்டா என்னும் கிராமம் போய்ச்சேர்ந்தார். அங்கே அவர் ராய்மோகன் மாலி என்பவருடைய விருந்தாளியாகத் தங்கி இருந்தார். ராய்மோகன் மாலி தீண்டாத ஜாதியார்களில் மிகத் தாழ்ந்த கடைசி ஜாதியைச் சேர்ந்தவர்.

காந்தியடிகள் அந்த கிராமத்துக்குப் போனதும் அங்குள்ள ஹிந்துப் பிரமுகர் ஒருவர் 4 ஏகரா பூமியை காந்தியடிகளுக்குத் தானம் செய்தார். அங்குள்ள பூமியில் அதுதான் சிறந்த நிலம். காந்தியடிகள் அதை ஏற்றுக் கொண்டு அது சகல ஜனங்களுக்கும் ஜாதி மத பேத மின்றி பொதுவாக உபயோகிக்கப் பட வேண்டுமென்று கூறினர்.

சுதந்திரத்தைக் காக்கும் வழி சந்தோஷமாக உயிர் துறக்கத் தயாராக இருப்பதுவே—கதே.

அன்று நேத்தாஜீ சுபாஷ் சந்திர போஸின் பிறந்த தினம். அதைக் குறிப்பிட்டு காந்தியடிகள் மாலையில் நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசியதாவது :—

"சுபாஷ் சந்திர போஸின் ஜீவிய சரித்திரத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு உன்னதமான விஷயம் யாதெனில் அவர் இந்தியா முழுவதை பாகுபாடு செய்யாமல் ஏகமாகவே எண்ணினர் என்பதும் ஜாதி மத பேதமின்றி சகல சமூகத்தாரையும் சரிசமானமாகவே கருதினரென்பதும் இந்த விதமான கருத்தையும் மனோ பாவத்தையும் "ஆஸாத் ஹிந்து பௌஜ்" என்னும் சுதந்திர இந்திய சேனையைச் சேர்ந்தவர்கள் எல்லோரிடமும் சிருஷ்டி செய்தார் என்பதுமே யாகும்.

இந்தக் கிராமத்திலுள்ள சௌத்திரி வகுப்பார் இப்பொழுது நாம் கூடியுள்ள இந்த இரண்டு ஏகரா நிலத்தை எனக்குத் தானம் செய்வதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அவர்களுடைய வண்மைக்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன். எனக்கு ஏதேனும் கொடுத்தால் எல்லோருடைய உபயோகத்துக்காகவும் கொடுக்கப் பட்டதாகவே அர்த்தம். ஆதலால் எனக்கு கொடுப்பதாக பிரமாணப் பத்திரம் எழுதும் பொழுது அதற்குத் தக்கவாறு எழுதுவார்கள் என்று நம்புகிறேன்.

நான் இங்கே தீண்டாத வகுப்பு நண்பர் வீட்டில் தங்கி இருக்கிறேன். அதுவும் சந்தோஷப்பட வேண்டிய விஷயமாகும். நான் எந்த ஜாதியையும் சேர்ந்தவனல்லன். ஹிந்து சமூக ஏணியில் அடிப்படியில் உள்ளவன். உண்மையாக ஆராய்ந்தால் உயர்வு, தாழ்வு கிடையாது. சட்டத்தின் சந்நிதானத்தில் போலவே கடவுளுடைய சந்நிதானத்திலும் சகல மக்களும் சம அந்தஸ்து உடையவர்களே யாவார்கள்.

ஹிந்துக்கள் ஜாதி வித்தியாஸங்களை மறந்து விட வேண்டும். அப்பொழுது தான் முன்னேற்ற மடைவார்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஹிருதய பூர்வமான ஒற்றுமையை நிலவும்படி செய்ய வேண்டும். இறுதியில் இறைவன் சன்னிதானத்தில் விசாரணை செய்யப் படும்பொழுது எந்த மனிதனும் தன்னுடைய கொள்கைக்காக மதிக்கப்பட மாட்டான், தன்னுடைய செயலுக்காகவே மதிக்கப் படுவான் என்று மகமதுநபி நாயகம் கூறியிருப்பது எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது."

## மாகாணத்தைவிட்டுச் செல்ல வேண்டாம்

மகாத்மா காந்தியடிகள் ஜனவரி மாதம் 24-ம் தேதி காலை டால்டா கிராமத்திலிருந்து "முரைம்" என்னும் கிராமத்திற்கு உழுது கிடந்த வயல்கள் வழியாகப் போய்ச்சேர்ந்தார். அங்கே மௌலானா ஹபிபுல்லா பதாரி என்னும் முஸ்லிம் பிரமுகர் வீட்டில் தங்கி இருந்தார். அவர் அவரை மனப்பூர்வமாக வரவேற்று அத்தகைய பெரியாரை தம்முடைய விருந்தாளியாகப் பெற்றது தம்முடைய பாக்கியமே என்று கூறினர். தம்மால் அவர்களுக்கு ஏதேனும் அசௌகரியம் உண்டோ என்று காந்தியடிகள் வினவினர். அப்படி ஒன்றும் கிடையாதென்று மௌலானா கூறினர். அப்பொழுது காந்தியடிகள்

"நான் கால் நடைப் பிரயாணத்தை ஆரம்பித்தபின் முஸ்லிம் நண்பர்களின் விருந்தாளியாக இருப்பது இது மூன்றாவது தடவையாகும். எனக்கு மிக்க சந்தோஷமாக இருக்கிறது. நான் தென் ஆப்பிரிக்காவில் 20 வருஷகாலம் முஸ்லிம்களுடைய வீடுகளில் வசித்து வந்திருக்கிறேன்." என்று கூறினர்.

கிரஷக் சமிதி பிரதிநிதிகளும் ஹாஸ்னபாத் ஜன சகாய கமிட்டி பிரதிநிதிகளும் காந்தியடிகளைப் பார்க்க வந்திருந்தார்கள். அரசியல் திட்டத்தை வகுத்து அதை அமல் நடத்திவைப்பதின்மூலம் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை உண்டாக்க முடியுமல்லவா என்று அவர்கள் காந்தியடிகளிடம் கேட்டார்கள். அதற்கு காந்தியடிகள் கூறிய பதிலாவது :—

"அது உங்களால் முடியக்கூடிய காரியமாயிருக்கலாம். ஆனால் என்னுடைய வழி வேறாகும். ஜனங்கள் தங்களுக்குத் தாங்களே உதவிசெய்து கொண்டால் அரசியலைப்பற்றி அவர்கள் லக்ஷயம் செய்ய வேண்டியதில்லை என்பது என்னுடைய கருத்து."

வந்திருந்தவர்கள் கேட்ட அடுத்த கேள்வியாவது :— "இங்கே சில பகுதிகளில் குடியானவர்கள் விளையும் மாசூலில் பாதி எடுத்துக்கொண்டு பாதியை நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு கொடுத்து வருகிறார்கள். ஆனால் மாசூலில் மூன்றில் இரண்டு பங்கு வேண்டுமென்று வங்காளத்தில் ஒரு இயக்கம் நடந்து வருகிறது. அதற்கு "இரு பாக இயக்கம்" என்று பெயர். அதைப்பற்றி தங்களுடைய கருத்து யாது?

காந்தியடிகள் பதில் :—

"அந்த இயக்கத்தைப் பற்றிய விவரங்களை எனக்கு எழுதி அனுப்புங்கள். அப்பொழுதுதான் நான் அதைப்பற்றி அபிப்பிராயம் கூறமுடியும். ஆனால் நல்ல இயக்கங்களெல்லாம் என்னுடைய ஆசீர்வாதத்தைப் பெறும்."

அன்று மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்திற்குப் பதினயிரம் ஜனங்கள் வந்திருந்தார்கள். காந்தியடிகள் கூறியதாவது :—

"சில பத்திரிகைகள் ஜனங்களுக்குச் செய்திகளை அறிவிப்பதைப் பார்த்தால் விஷத்தைக் கொடுப்பது போலவே தோன்றுகிறது. முன்னாளில் ஜனங்கள் பைபிளையும் பகவத் கீதையையும் வேத வாக்காக நம்பியதுபோல இந்நாளில் ஜனங்கள் பத்திரிகையையே வேத வாக்காக நம்புகிறார்கள். ஆதலால் பத்திரிகைக்காரர்கள் ஜனங்களுக்கு உண்மையாக நடந்த விஷயங்களைக் கூறவேண்டுமேயன்றி பொய்யான கதைகளைக் கூறலாகாது.

சிறுபான்மையோராக உள்ளவர்கள் தங்கள் சமூகத்தார் பெரும்பான்மையோராக உள்ள மாகாணங்களுக்குப் போய்விட வேண்டுமென்று கூறும் யோசனை காரிய சாத்தியமானதன்று. பீஹாரிலுள்ள முஸ்லிம்கள் பீஹாரை விட்டு வெளியேறக் கூடாது. பீஹார் ஹிந்துக்களில் சிலர் மனிதத்தன்மை இல்லாமல் நடந்து கொண்டார்கள் என்பது உண்மைதான். அது தற்காலிகமாக ஏற்பட்ட மனக் கோளாறேயன்றி வேறன்று. ஆதலால் அங்குள்ள முஸ்லிம்கள் தங்களுக்குப் பாத்தியப்பட்ட வீடுகளையும் நிலங்களையும் விட்டுவிட்டு வெளியேறலாகாது. அங்குள்ள ஹிந்துக்கள் வெறி பிடித்துச் செய்யப்பட்ட அக்கிரமங்களுக்குப் பரிகாரங்கள் தங்களால் ஆன மட்டும் செய்யவேண்டும். இதுபோலவே நவகாளியிலுள்ள ஹிந்துக்களும் முஸ்லிம்களும் நடந்து கொள்ளவேண்டும். இங்கே ஒரு ஹிந்து தனியாக இருப்பினும் அவருக்கு பரிபூர்ணமான பாதுகாப்பு அளிப்பது நவகாளி முஸ்லிம்களுடைய கடமையாகும். ஹிந்துக்கள் நவகாளியில் தங்கி இருப்பதற்கு வேண்டிய மன உறுதியுடையவர்களா யிருக்க வேண்டும்.

இன்று பிரார்த்தனைக் கூட்டத்திற்கு ஏராளமான சகோதரர்கள் வந்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் திருமதி அம்துஸ் ஸலாமின் உண்ணாவிரதமே யாகும். அவருடைய உண்ணாவிரதம் நல்லவிதமாக முடிந்தது குறித்து எனக்கு நிரம்பச் சந்தோஷம்."

தமிழ் ஹரிஜன்

பிப்ரவரி 2, ஞாயிறு 1947

## இந்திய சுதந்திர தினம்

மகாத்மா காந்தியடிகள் ஜனவரி மாதம் 26-ம் தேதி காலை ஹிராபூரிலிருந்து பான்ஸா கிராமத்திற்கு நடந்து சென்றார். அவருடன் சென்ற ஜனங்கள் வந்தே மாதரம் என்னும் பாட்டுப் பாடிக் கொண்டு போனார்கள். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சேர்ந்து வங்காளியிலும் ஹிந்துஸ்தானியிலும் ஒற்றுமை கீதங்கள் பாடினார்கள். காந்தியடிகள் மௌனமாக கை கூப்பிய வண்ணம் அப் பாடல்களைக் கேட்டுக் கொண்டே இருந்தார்.

காந்தியடிகள் பான்ஸா கிராமம் போய்ச் சேர்ந்ததும் பீஹார் சர்க்காரின் பிரதிநிதியாக சென்று கொண்டிருக்கும் திரு. யாஹூ பென் சாஹேப் என்பவர் அன்று இந்திய சுதந்திர தின மாகையால் தேசீயக் கொடியை ஏற்றுவித்தார். முகமத் அஹமத் ஹூனர் என்பவர் ஹிந்துஸ்தானியில் சுதந்திரப் பிரதிக்ஞையை வாசித்தார். வந்திருந்தவர்கள் எல்லோரும் பிரதிக்ஞை செய்து கொண்டார்கள். பான்ஸா கிராமத்திலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் உள்ள முஸ்லிம்களில் பலர் அந்த வைபவத்தில் கலந்து கொண்டார்கள்.

அன்று இரவு ஒரு விருந்து நடைபெற்றது. அதில் ஜாதி ஹிந்துக்களும் முஸ்லிம்களும் தீண்டாதவர்களும் கலந்து கொண்டார்கள். அன்று மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்கு ஏராளமான ஜனங்கள் வந்திருந்தார்கள். கூட்டம் நடந்த இடத்தில் காந்தியடிகளின் விருப்பத்திற் கிணங்க மூவர்ண தேசீயக் கொடி ஏற்றி வைக்கப் படவில்லை. காந்தியடிகள் செய்த பிரார்த்தனைப் பிரசங்கமாவது :—

"இந்தியாவில் சுதந்திரம் வேண்டுமென்ற இயக்கம் காங்கிரஸ் ஜனித்த பொழுது சரியான உருவம் அடைந்தது. அந்த இயக்கம் 1916 வருஷத்திற்குப் பின் கிராமங்களில் பரவ ஆரம்பித்தது. அதன்பின் பல வருஷங்கள் கழித்து பரிபூர்ண சுதந்திரத் தீர்மானம் நிறைவேறிற்று. அது முதல் ஜனவரி மாதம் 26-ம் தேதி இந்திய சுதந்திர தினமாக நாடெங்கும் கொண்டாடப் பட்டு வருகிறது. சுதந்திர இயக்கத்தில் லக்ஷக் கணக்கான மக்கள் ஈடுபட்டார்கள். இந்தியருக்கு அதிர்ஷ்டம் இருந்திருக்குமானால் இந்த இடத்திலும் மூவர்ணக் கொடி பறந்து கொண்டிருக்கும். ஆனால் நமக்குள் வித்தியாச மேற்பட்டிருப்பதால் அதை இங்கே பறக்க விட வேண்டா மென்று நண்பர்களிடம் கேட்டுக் கொண்டேன். அது இந்தியாவிலுள்ள சகல ஜனங்களுக்கும் சொந்தமான கொடியாகும். ஆனால் துரதிருஷ்ட வசமாக நம்முடைய முஸ்லிம் சகோதரர்கள் அதைக் குறித்து பெருமை கொள்ளாதிருக்கிறார்கள். அதை வெறுக்கக் கூட செய்கிறார்கள். ஆதலால் அதைக்கொண்டு வந்து அவர்களுக்கு முன் பறக்க விட்டு அவர்களைத் துன்புறுத்த விரும்ப வில்லை. சுதந்திரமானது கைக்கு எட்டி விடும்போல் இருக்கிறது. இந்தச் சமயத்தில் நாம் அறிவில்லாமல் நடந்து அதைக் கை நழுவ விட்டுவிடக் கூடாது.

பிரிட்டிஷ் சர்க்கார் மூவர்ணக் கொடியைப் பறக்க விடக் கூடாது என்று தடுத்திருந்தால் நான் அதன் கௌரவத்தைக் காப்பதற்காக பிராணத் தியாகம் கூட செய்து விடுவேன். ஆனால் இப்பொழுது முஸ்லிம் நண்பர்களுடைய மனத்தைப் புண்படுத்த வேண்டா மென்றே அந்தக் கொடி இங்கே ஏற்றி வைக்கப் படவில்லை. முஸ்லிம்கள் தேசீயக் கொடியை வெறுப்பதால் நான் அவர்களுடைய மனத்தைப் புண்படுத்த விரும்ப வில்லை. இந்தக் கூட்டத்தில் காணப் படா விட்டாலும் என்னுடைய ஜாகையில் இன்று காலை அது பறக்க விடப்பட்டது.

இந்தச் சமயத்தில் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸை ஞாபகப்படுத்துகிறேன். அவரும் அவருடன் சேர்ந்த பலரும் இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைக்க வேண்டுமென்பதற்காக தங்கள் வாழ் நாள் முழுவதையும் அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். அவர்களை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்."

## முஸ்லிம்களின் உபசாரம்.

மகாத்மா காந்தியடிகள் ஜனவரி மாதம் 27-ம் தேதி பல்லா என்னும் கிராமத்தில் திருஜகத் பந்து நாத் என்னும் சேவாளர் வீட்டில் தங்கி இருந்து விட்டு 28-ம் தேதி காலையில் பாஞ்ச்கான் என்னும் கிராமத்திற்கு நடந்து சென்றார் அவர் இடை வழியில் இரண்டு இடங்களில் தங்கிப்போவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முதல் இடத்தில் உள்ள ஹிந்துக்கள் அவருக்கு கால் கழுவுவதற்காக ஒரு வாளியில் வெந்நீர் கொண்டு வந்தார்கள். அதி காலையில் கடுமையான குளிராக இருந்தது. அதனால் காந்தியடிகள் தம்முடைய பாதங்களை வெந்நீருக்குள் சிறிது நேரம் வைத்துக் கொண்டிருந்தார். அது அவருடைய களைத்துப்போயிருந்த பாதங்களுக்குச் சுகமாயிருந்தது.

வேறு ஒரு குக்கிராமம் சென்றதும் வயதான முஸ்லிம் ஒருவர் விரைக்க விரைக்க ஓடி வந்து காந்தியடிகளை ஒரு கண நேரம் தம் தம்முடைய குடிசைக்கு வந்து போகுமாறு வேண்டிக் கொண்டார். அந்த இடம் அவர் தங்குவதற்காக திட்டப் படுத்தப்பட்ட இடமல்ல. ஆதலால் காந்தியடிகள் முதலில் யோசித்தார். பிறகு இந்தக் கிழவர் இவ்வளவு ஆவலோடு அழைப்பதால் இவருடன் சென்று இன்னுமொரு நண்பரைத் தேடிக் கொள்வேன் என்று புன்முறுவலுடன் கூறிக்கொண்டு அவருடைய வீட்டிற்குச் சென்றார். அங்கே பெண்கள் எல்லோரும் காந்தியடிகளைச் சூழ்ந்து கொண்டதும், அவருடைய பாதங்களை அன்போடும் பக்தியோடும் தொட்டு வணங்கியதும் கண் கொள்ளாக் காக்ஷியாக இருந்தது.

காந்தியடிகள், குடிசையும் அங்கே விரிக்கப்பட்டிருந்த பாய்களும் வெகு சுத்தமாக இருப்பதைக் கண்டு மகிழ்ந்தார். முஸ்லிம் கிழவரிடம் யோக க்ஷேமம் விசாரித்தார். அவர் தாம் பரம ஏழை என்று தழ தழத்த குரலில் கூறினார். ஆம் இந்தியா முழுவதுமே ஏழை தான் என்று காந்தியடிகள் அவருக்கு ஆறுதல் கூறினார். அதன் பின் அங்கிருந்து புறப்பட்டு பாஞ்ச்கான் கிராமம் போய்ச் சேர்ந்தார்.

## பெண்களுக்குப் புத்திமதி

மகாத்மா காந்தியடிகள் சாந்திபூரில் தங்கிய பொழுது அவருடைய உபதேசத்தைக் கேட்பதற்காக அநேக பெண்கள் அவர் இருந்த வீட்டின் முற்றத்தில் வந்து கூடினார்கள். அப்பொழுது அவர் கூறியதாவது :—

"பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குக் கடவுளையும் தங்கள் சொந்த பலத்தையும் நம்பி இருக்கவேண்டுமே யன்றி பிறரை நம்பி இருத்தலாகாது. நீங்கள் மனோதைரியமுடையவர் களாகவும் உங்கள் பலத்தில் நம்பிக்கையுடையவர்களாகவும் இருக்கவேண்டும். போக்கிரிகள் உங்களைத் துன்பப் படுத்துவதற்குக் காரணம் உங்கள் பயம் தான்.

இந்தியப்பெண்கள் அபலைகள் அல்லர். முன் காலத்தில் நம்முடைய பெண்கள் பல வீரச்செயல்கள் செய்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் அவர்கள் வாளின் உதவியைக் கொண்டு செய்ய வில்லை. தங்கள் ஒழுக்கத்தின் மேன்மையைக் கொண்டே செய்திருக்கிறார்கள். இன்றும் கூட அவர்கள் தேசத்திற்கு பல வழிகளில் உதவி செய்ய முடியும். அவர்கள் ஏதேனும் உபயோகமான தொழில் செய்தால் அதனால் அவர்களுக்கும் நன்மையுண்டு தேசத்திற்கும் நன்மை யுண்டு.

இங்கு நடந்த அக்கிரமங்களுக்கு ஆண்கள் தான் காரணமென்று எண்ண வேண்டாம். பெண்களும் காரணம் தான். நீங்கள் எல்லோரும் திரௌபதியைப் போலவும் சீதையைப் போலவும் பயமில்லாதவர்களாகவும் கடவுளிடம் நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

நீங்கள் தீண்டாமையை அறவே நீக்கிவிடவேண்டும். இன்னும் அதை நீங்கள் வைத்துக் கொண்டிருப்பீர்களேயானால் அதிகமான துன்பமே உங்களுக்கு உண்டாகும். நீங்கள் ஒவ்வொருவரும் தினந்தோறும். ஒரு ஹரிஜனை உங்களுடன் சாப்பிடவரும்படி அழைக்க வேண்டும். அது முடியா விட்டால் நீங்கள் சாப்பிடு முன் உங்கள் உணவைத்தொடும்படி ஒரு ஹரிஜனைக் கேட்டுக் கொள்ளவேண்டும். இப்படிச் செய்தால் அநாவசியமாக நாம் ஏற்படுத்தி யிருக்கும் ஜாதிப் பிரிவினைகள் ஒழிந்து போய் உறுதியான ஒற்றுமை யுண்டாகும். இந்த விதமாக நீங்கள் உங்கள் பாவங்களுக்குப் பிராயச்சித்தம் செய்யாவிட்டால் இப்பொழுது ஏற்பட்டதைவிட பெரிய கொடுமைகள் உங்களுக்கு வந்துசேரும்.

## சமாதானப்படுத்துதல்

காந்தியடிகள் சாந்திபூரில் தங்கி யிருந்தபொழுது கிராம சேவா சங்கத்தார் அவரிடம் சில கேள்விகள் கேட்டார்கள். அந்தக் கேள்விகளும் காந்தியடிகள் உரைத்த பதில்களும் வருமாறு :—

கேள்வி :—“ பெரும்பான்மை வகுப்பார் அக்கிரமம் செய்யும் நோக்கமுடையவர்களா யிருக்கிறார்கள். அவர்களைச் சமாதானப்படுத்துவதற்காகச் செய்யக் கூடியது யாது ?”

பதில் :—சமாதானப்படுத்துதல் என்பது கர்ண கடூரமான சொல்லாக ஆகி இருக்கிறது. எந்தக் காலத்திலும் சமாதானப் படுத்துவதற்காக மானத்தை இழந்துவிட முடியாது. எவ்வித பயத்தையும் ஒழித்து விடுவதும் என்ன நேர்ந்தாலும் எது நியாயமோ அதைச் செய்வதும் உண்மையாக சமாதானப்படுத்துவதாகும்.

கேள்வி :—“ அக்கிரமங்களுக்குப் பயந்து ஓடி வந்தவர்கள் தற்காலிகமாக குடிசை கட்டிக்கொள்வதற்கு சர்க்கார் கொடுக்கும் பணம் போதுமானதாக இல்லாவிட்டால் அதைப் பெற்றுக்கொள்ளலாமா, பெற்றுக்கொள்ளக் கூடாதா ?”

பதில் :—“ தற்காலிகமாக தங்குவதற்கு குடிசை கட்ட குறைந்த பக்ஷம் எவ்வளவு பணம் வேண்டுமென்று தீர்மானிக்க வேண்டும். அவ்வளவு பணத்தைச் சர்க்கார் தராவிட்டால் அவர்கள் கொடுக்கும் பணத்தை வாங்கக் கூடாது. ஆயினும் வீடு கட்டப் பணம் இல்லாவிட்டாலும் தைரியமாகத் திரும்பி வந்து விடவே வேண்டும். இப்படிச் செய்வதில் எவ்வித வருத்தமும் கொள்ளக்கூடாது.”

கேள்வி :—திரும்பி வரும் ஜனங்கள் பாதுகாவலை உத்தேசித்து பெரிய பெரிய கூட்டமாகத்தானே தங்கி இருக்க வேண்டும் ?”

பதில் :—“ அப்படிக் கூட்டம் கூட்டமாக வைத்திருப்பது கூடாது. அப்படிச் செய்தால் நாட்டிலுள்ள மக்களை இரண்டு விரோதிகள் கூட்டமாக பிரித்து வைப்பதாக ஆகும். நாம் செய்யவேண்டிய காரியம் கடவுளிடம் இருந்து வரும் ஆத்ம சக்தியை நம்பி நிற்பதேயாகும்.”

கேள்வி :—“ அக்கிரமிகள் இன்னும் கைதியாகாமல் அலைந்துகொண் டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் ஓடி வந்தவர்களுடைய பாதுகாவலுக்காக என்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டும் ?”

பதில் :—உலகத்தில் அக்கிரமிகள் இல்லாத இடமே கிடையாது. ஆதலால் கிராமவாசிகள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் தங்களுடைய பலத்தையே தான் நம்பி இருக்க வேண்டும். சாசுவதமான பாதுகாவலளிக்கக்கூடிய சக்தி மனவுறுதி என்னும் சக்தி தான். கடவுளை நம்பி விட்டால் எத்தனை அக்கிரமிகள் அலைந்தாலும் கவலையில்லை. எது சரியோ அதைச் செய்யுங்கள். மற்றதை எல்லாம் கடவுளிடம் விட்டு விடுங்கள்.

கேள்வி :—“ இப்பொழுது சர்க்காரும் சகாய சங்கங்களும் உதவிசெய்து வருகிறார்கள். அவர்கள் அதை நிறுத்திவிட்டால் பிழைப்புக்காக என்ன வேலை கொடுக்கலாம் ?”

பதில் :—நூல் நூற்றல் வேலை கொடுக்கலாம். ஆனால் ஒவ்வொருகிராமத்தின் நிலைமையையும் அறிந்து கொண்டு அபிப்பிராய கூறுவதுதான் சரியானதாகும்.

## பூ ணூ ல்

காந்தியடிகள் மாஸிம்பூர் என்னும் கிராமத்திற்கு வந்தபொழுது கிராம சேவா சங்கத்தார் அவரிடம் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஹிந்துக்கள் பூணூல் தரிக்க வேண்டுமென்று ஆரிய சமாஜத்தார் கூறுகிறார்கள், அதைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன ? என்று காந்தியடிகளிடம் கேட்டார். காந்தியடிகள் கூறிய பதிலாவது :—

“பிரியமுள்ளவர்கள் பூணூலை அணிந்துகொள்ளலாம். ஆனால் இது சம்பந்தமாக எவ்வித இயக்கமும் பிரசாரமும் நடத்தலாகாது. பூணூலைத் தரிப்பதால் மட்டும் எந்தவிதமான நன்மையும் ஏற்பட்டுவிடாது. அதனால் ஹிந்து மதத்திலுள்ள குறைகள் நீங்கிவிடா. வெளித்தோற்றம் முக்கியமல்ல. அகத் தூய்மையே அத்தியாவசியமாகும்.

## காந்தியடிகள் கால் நடைப் பிரயாண முறை

காந்தியடிகள் வெறுங் காலோடு நடந்து செல்கிறார். அவருக்குத் தோழமையாயிருப்பது அவருடைய கையிலுள்ள ஊன்று கோல் ஒன்றுதான். அவர் தம்முடையப் பிரயாணத்தைப் பற்றிச் கூறியதாவது :—

“ எனக்கு கிராமத்தார் தங்க இடம் தருகிறார்கள். எனக்கு அது போதும். எனக்கு வேண்டிய உணவை என்னுடனேயே கொண்டு போகிறேன். என்னுடன் வருகிறவர்களுக்கு வேண்டிய வசதிகளை அன்பர்கள் ஏற்கனவே செய்திருக்கிறார்கள். அத்துடன் நானும் கிடைத்ததைச் சாப்பிட்டுக் கொள்வேன். பால் சாப்பிடாமலிருக்கக் கூடத் தயாரா யிருக்கிறேன். நான் யாருக்கும் பேட்டியளிக்கவில்லை. ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் கண்டு பேசி ஒற்றுமையாக வாழும் படிக்கும் கடவுளைத் தவிர வேறு யாருக்கும் பயப்படாமலிருக்கும் படிக்கும் கேட்டுக் கொள்வதிலேயே என்னுடைய நேரத்தைக் கழிப்பேன். என்னோடு என்னுடைய சிறிய படுக்கையையும் பெட்டி ராட்டினத்தையும் கீதையையும் குர்ஆனையும் பைபிளையும் மட்டும் கொண்டு போகிறேன்.”

## நல்ல செய்தியும் கெட்ட செய்தியும்

ஜோத்பூர் சமஸ்தானத்திலுள்ள பிரதம வைத்தியர் எழுதுகிறார் :—

"சமஸ்தானத்திலுள்ள வைத்திய இலாகாவைச் சேர்ந்த தோட்டிகள் டிஸம்பர் 14-ம் தேதி ஒரு விருந்து நடத்தினர்கள். அதற்கு வைத்திய இலாகாவைச் சேர்ந்தவர்களையும் வெளியில் இருந்தவர்களையும் அழைத்திருந்தார்கள். சமையல் செய்து பரிமார வேண்டிய தோட்டிகள். சோப்பு கொண்டு தேய்த்துக் குளித்துச் சுத்தமான உடை உடுத்தி சமையல் செய்தார்கள். அவர்களுக்கும் மற்ற மனிதர்களுக்கும் எவ்வித வித்தியாஸமும் கிடையாதென்றும் ஆப்பரேஷன் செய்யும் டாக்டர்களுடைய வேலையைப் போன்றதே அவர்களுடைய வேலை என்றும், அவர்களைப் போலவே தோட்டிகளும் வேலை முடிந்த பின் ஸ்நானம் செய்து விட்டால் மற்றவர்களைப் போல் ஆகிவிடுவார்கள் என்றும் அவர்களுக்கு நாங்கள் எடுத்துரைத்தோம்."

இது ஒரு நல்ல செய்தி. மற்றொரு கேவலமான செய்தியும் வந்திருக்கிறது. கல்கத்தாவில் மாட்டு வைத்திய கலாசாலை ஆசிரியர் ஒருவர் இங்கிலாந்து சென்று பெரிய கல்விப் பட்டங்கள் பெற்று வந்தவர் அவருக்கு குடியிருக்க வீடு வேண்டியிருந்தது. ஹரிஷ் முகர்ஜி ரோடில் ஒரு வீடு காலியாக இருந்தது. அந்த வீட்டுக்காரர் வாடகைக்கு கொடுக்க சம்மதித்தார். ஆனல் திடீரென்று ஆசிரியரிடம் தங்கள் ஜாதி யாதென்று கேட்டார். ஆசிரியர் ஹரிஜன் என்று பதிலுரைத்தார். வீட்டுக்காரர் வாடகைக்குத் தர முடியாது என்று சொன்னர். வீடு தனியாக உள்ளது. ஒட்டுக் குடித்தனமாக உள்ள தல்ல. வீட்டுக்காரர் வக்கீலாகவும் ஆசிரியராகவும் இருந்தவர். அப்படியிருந்தும் அவர் ஜாதி வித்தியாசத்தை எண்ணி வீட்டை வாடகைக்கு கொடுக்க மறுத்தார்.

ஆசிரியர் மிகுந்த வருத்தத்துடன் காந்தியடிகளுக்கு எழுதிய கடிதத்தில் கீழ்க் கண்டவாறு கூறுகிறார் :—

"எனக்கு இது பெரிய காரியமாகத் தோன்றுகிறது. என்னுடைய வாழ்வையே பாதித்து விடும் போல் இருக்கிறது. 6 வருஷம் இங்கிலாந்தில் வசித்துவிட்டு வந்தேன். இதை என்னல் தாங்க முடியவில்லை. என்னுடைய மனே நிலைமை எப்படி இருக்குமென்று யோசித்துப் பாருங்கள்."

வீட்டுக்காரர் பெரிய தவறு செய்து விட்டார். இந்த மாதிரி காரியங்கள்தான் சமூகக் கலகங்கள் உண்டாவதற்கும் ஹிந்து சமூகத்தில் பலவகுப்பினர் பிரிந்து நின்று வேறு வேறு அரசியல் கோரிக்கைகள் விடுப்பதற்கும் காரணமாகும். வீட்டுக்காரர் ஆசிரியரை அழைத்து மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டு வீட்டைக் கொடுப்பதே அறிவுடைமையாகும்.

கே. ஜி. எம்.

## இரண்டு கதைகள்

ஸாதி என்னும் பாரசீக கவி சிரேஷ்டர் கூறுவது:—

"ஒரு காலத்தில் ரோஜாச் செடியுடன் இருந்த மண்கட்டியை ஒருவர் கையில் எடுத்தார். அது நல்ல மணமுடையதாக இருந்தது. அவர் அதைப் பார்த்து இந்த மணம் உனக்கு எது என்று கேட்டார். அதற்கு அந்த மண்கட்டி "என்னிடத்தில் மணம் கிடையாது. இந்த மணம் என்னுடையதன்று. ரோஜாவுடன் சேர்ந்திருப்பதால் நானும் மணமுடையதாயிருக்கிறேன்" என்று பதில் சொல்லிற்று.

இரண்டாவது கதை தேவன் போர்ட் ஆடம்ஸ் என்பவர் எழுதிய "வெற்றியின் ரகசியம்" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும். அது வருமாறு:-

அமெரிக்காவிலுள்ள போஸ்டன் நகரத்தில் ஒரு வியாபாரி இறந்த பிறகு அவருடைய கடிதமொன்று காணப்பட்டது. அதில் கீழ்க் கண்டவாறு எழுதி இருந்தது.

"கடவுள் அருளால் என்னுடைய ஆஸ்தி 50 ஆயிரம் டாலருக்கு அதிகமாக ஆகாது. என்னுடைய வருமானத்தில் 4-ல் ஒரு பகுதியை தருமத்திற்குக் கொடுப்பேன். எனக்கு 20 ஆயிரம் டாலர் சொத்து உண்டாகுமானல் பாதியைக் கொடுத்து விடுவேன். முப்பதாயிரம் உண்டாகுமானல் முக்கால் பாகத்தைக் கொடுத்து விடுவேன். 50 ஆயிரம் உண்டானல் முழுவதையும் கொடுத்து விடுவேன். இறைவனே! இந்தவிதமாக நடந்து கொள்வதற்கு வேண்டிய ஆற்றலை எனக்குக் கொடுத்தருளும்"

அந்த வியாபாரி அந்த விதமாகவே நடந்து கொண்டார். கடவுள் கொடுக்கும் பணத்தை கடவுள் ஏஜண்டாக இருந்து விநியோகம் செய்தார். ஜைனர்களுடைய பரமாச்சாரியாராகிய மகாவீரசுவாமியினுடைய பத்து சிஷ்யர்களும் எவ்விதம் பற்றில்லாமல் நடந்து கொண்டார்களோ அவ்விதமே அவர் நடந்து கொண்டார். அத்தகைய கடவுள் பக்தர்கள் இக்காலத்தில் இருக்கிறர்களா ?

வி. ஜி. டி.

## அலட்சியம் செய்யப்பட்ட ஒரு சேவை

"மஹா ரோகி சேவா மண்டல்" என்னும் குஷ்டரோகி சேவா சங்கம் சென்ற 10 வருஷ காலமாக வார்தாவைச் சுற்றி சேவை செய்து வருகிறது. திரு. மனேகர் திவான் என்பவர் தன்னந் தனியராக இருந்து கொண்டே ஸ்தாபித்தார். தம் வாழ்வு முழுவதையும் இதற்கு அர்ப்பணம் செய்துவிட்டபடியால் அது சாத்தியமாயிற்று. கிருஸ்தவ பாதிரி குஷ்டரோக சங்கத்தாரிட மிருந்து அதற்கு வேண்டிய விஷயங்களை அறிந்து கொண்டார்.

திரு. மனேகர் 20 வருஷ காலம் என்னுடன் இருந்து வருகிறார். அவர் சமைத்தல், தோட்டி வேலை, நூல் நூற்றல், பஞ்சு வெட்டல், நெய்தல் போன்ற ஆசிரம வேலை எல்லாவற்றையும் செய்து பழகி இருக்கிறார். இந்த வேலைகளைப் பல வருஷங்கள் இடை விடாமல் செய்திருக்கிறார். இப்படித் தம்மைத் தயாரித்துக் கொண்டு வார்தா தாலுகாவிலுள்ள ஜனங்களுக்குச் சேவை செய்தார். அப்பொழுது குஷ்டரோகிகளைக் கண்டு மனம் இளகி அவர்களுக்கு ஊழியம் செய்ய தம்முடைய வாழ்வை அர்ப்பணம் செய்ய தீர்மானம் செய்தார். அதை என்னிடம் கூறினர். அது செய்ய வேண்டிய காரியம் தான், ஆனல் யாரும் உதவிக்கு வர மாட்டார்கள் என்று எச்சரிக்கை செய்தேன். எங்கள் சக ஊழியர்கள் வேறு நல்ல வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். வெளியிலிருந்து யாரும் இந்த வேலைக்கு வரமாட்டார்கள். அத்துடன் குஷ்டரோகம் அவரிடம் தொத்திக் கொண்டாலும் தொத்திக் கொண்டு விடலாம். அதற்கு வேண்டிய வைத்திய அறிவையும் அவர் பெற வேண்டும். இந்தக் காரியத்தில் ஈடுபட்டால் வேறு எந்தக் காரியத்திலும் ஈடுபடலாகாது என்றும் சொன்னேன். அவர் ஏற்கெனவே இவைகளை எல்லாம் சிந்தித்துப் பார்த்த பிறகே தீர்மானம் செய்திருந்தார்.

அவருடைய தாயார் "இந்த வேலை வேண்டாம்; சேவை செய்ய வேறு நல்ல அவசியமான துறைகள் இல்லையா?" என்று வருத்தத்துடன் கேட்டார்.

தீண்டாமை என்கிற தீய வழக்கம் தீரத் தொலைந்திட நாளாச்சு—நாமக்கல் கவிஞர்

அதற்கு நான் "அம்மா உங்களுக்கோ எனக்கோ அந்த நோய் வந்து விட்டால் மனேகர் நமக்கு சேவை செய்ய வேண்டுமா? அல்லது நம்மை விட்டு விட்டுப் போய்விட வேண்டுமா? என்று கேட்டேன்."

*தாயார் :—*

நமக்கு வந்தால் அவன் நமக்கு சேவை செய்யவேண்டியதுதான்.

*நான் :—*

அது போல்தானே இப்பொழுது அவர் செய்யப் போகும் சேவையும்?

*தாயார் :—*

ஆமாம் அது சரிதான் என்று கூறி ஆறுதல் அடைந்தார்.

திரு. மனோகர் பலரிடமிருந்து ஒத்துழைப்பைப் பெற்றார். ஒத்துழைப்பில்லாமல் அந்த வேலையை ஆரம்பித்திருக்க முடியாது. ஆனால் இன்னும் அவருக்கு கிருஸ்தவரல்லாதவரிடமிருந்து ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.

சென்ற பத்து வருஷ காலத்தில் தேசத்தின் நிலைமை அதிகமாக மாறி இருக்கிறது. சுதந்திர அருணோதயம் கண்ணுக்குப் புலனாகிக் கொண்டிருக்கிறது. சுதந்திர சூரியன் வெகு சீக்கிரத்தில் எழுந்து விடுவானென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்தியாவில் 40 லக்ஷம் குஷ்டரோகிகள் இருக்கிறார்கள். அதாவது மொத்த ஜனத் தொகையில் நூற்றுக்கொருவர் குஷ்டரோகி யாவார். வைத்தியர்கள் இதைப் பற்றி நன்றாகச் சிந்திக்க வேண்டும்.

இதுவரை கிருஸ்தவ பாதிரியார்கள் தான் குஷ்டரோகிகளுக்குச் சேவை செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மத மாற்றம் செய்யும் நோக்கத்தையும் அத்துடன் கலந்து விடுவதினால் அவர்களுடைய சேவையின் மதிப்பு குறைந்து விடுகிறது. ஆயினும் அவர்களுடைய சேவை நல்ல சேவையாகும்.

ஹிந்து மதமானது ஜீவகாருண்யம் என்பதைப் போதிக்கின்றது. அதன் காரணமாகவே சைவ உணவு உண்ணும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஜீவகாருண்யம் வேண்டுமானால் மனிதனிடமும் கருணை காட்ட வேண்டுமல்லவா? மனிதனுக்குச் சேவை செய்யும் துறைகளில் குஷ்ட ரோகிகளுக்குச் சேவை செய்வதும் ஒன்று. அதை நாம் இதுவரை கவனியாதிருந்து விட்டோம். இனிமேல் அப்படி இருக்கக்கூடாதென்று ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

**வினோபா.**

## ஹிந்துஸ்தானி

இந்தியா சுதந்திரமடைந்தவுடன் இங்கிலீஷ் அரசாங்க பாஷையாயிராது என்று சொல்லத் தேவையில்லை. அப்பொழுது மாகாண அரசாங்க நிர்வாகம் மாகாண பாஷைகளிலும் மத்திய அரசாங்க நிர்வாகம் ஹிந்துஸ்தானியிலும் நடத்தப்படும். மாகாணங்களுக்கு இடையிலுள்ள காரியங்களும் அகில இந்திய ஸ்தாபனங்களின் காரியங்களும் தேச பாஷையிலேயே நடத்தப்படும். இந்தியா சுதந்திரமடைந்தால் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தில் சீன பாஷைக்குள்ள ஸ்தானம் ஹிந்துஸ்தானிக்கும் கிடைக்கும். அந்த ஸ்தாபனத்திற்கு இந்தியாவிலிருந்து போகும் பிரதிநிதிகள் மற்ற மெம்பர்களின் சௌகரியத்திற்காக கொஞ்ச காலம் இங்கிலீஷ் பாஷையில் பேச வேண்டி இருக்கும்.

ஹிந்துஸ்தானி வட இந்தியாவின் பாஷை. அதிலிருந்துதான் இக்காலத்தில் காணப்படும் உருது இலக்கியங்களும் ஹிந்தி இலக்கியங்களும் பிறந்தனவாகும். தேசத்தில் ஒற்றுமையானது நாளுக்கு நாள் அதிகமாக உண்டாகி வருகிறது. ஆதலால் ஹிந்தியும் உருதுவும் மறுபடியும் ஒன்று சேர்ந்து ஹிந்துஸ்தானியாகிய பொது பாஷையாக வேண்டும். ஜன நாயக உணர்ச்சி ஜனங்களிடையே பரவும் பொழுது மற்ற பாஷைகளைப் போல ஹிந்துஸ்தானியும் எளிய நடை உடையதாக ஆகும்.

இந்தியாவில் ஒற்றுமை யுண்டாவதற்காக சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் பொது ஜன ஊழியர்களும் ஜனங்களில் பலரும் தேசபாஷையை வாசிக்கத் தெரிந்து கொள்வதோடு சுலபமாக உபயோகிக்கவும் தெரிந்து கொள்ள வேண்டும். நாகரி லிபியும், உருது லிபியும் தேச முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

பாடசாலைகளில் முதல் 4-வருஷ காலத்தில் தாய் பாஷையோ மாகாண பாஷையோ தான் கற்பிக்கப்படவேண்டும். அதன் பிறகு ஹிந்துஸ்தானியை இரண்டு லிபியிலும் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

உயர்தர பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் வாசிக்கும் மாணவர்களை ஹிந்துஸ்தானியையும் அதன் இலக்கியத்தையும் கட்டாயமாகப் படிக்கும்படி செய்ய வேண்டும். தாய் பாஷையையும் ஹிந்துஸ்தானியையும் தெரியாதவர் எவரும் இந்தியாவில் இருக்கக் கூடாது. அந்த விதமாக அரசாங்கம் கல்வி முறையை அமைத்துக் கொள்ள வேண்டும். ஹிந்துஸ்தானியைக் கட்டாய பாடமாக இரண்டு லிபிகளிலும் ஆசிரியர் பாடசாலைகளிலும் கற்பிக்கவேண்டும்.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு வேலை காயமாக வேண்டுமானாலும் உத்தியோக உயர்வு கிடைக்க வேண்டுமானாலும் ஹிந்துஸ்தானி தெரிய வேண்டுமென்று ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஹிந்துஸ்தானியை இரண்டு லிபிகளிலும் கற்க விரும்புகிறவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும்.

புதிய இலக்கியங்களை ஹிந்துஸ்தானியில் வெளியிட விசேஷ ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

நல்ல ஹிந்தி புஸ்தகங்களையும், நல்ல உருது புஸ்தகங்களையும் ஹிந்துஸ்தானியில் எழுதி இரண்டு லிபிகளிலும் அச்சிட வேண்டும்.

இப்பொழுது ஹிந்துஸ்தானியைக் கட்டாயப் பாடமாகச் செய்திருக்கிறார்கள். ஆனால் எந்த லிபியில் படிப்பது என்பதை மாணவர்களையும் பெற்றோர்களையும் தீர்மானிக்கும்படி செய்திருக்கிறார்கள்.

இரண்டு லிபிகளையும் படிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தவில்லை.

செய்ய வேண்டியது யாதெனில், இரண்டு லிபிகளும் அவசியமென்று ஏற்றுக் கொள்வதும், ஜனங்களுடைய அபிப்பிராயம் பலமடையும்வரை ஹிந்துஸ்தானியைக் கட்டாய பாடமாக ஆக்காமலிருப்பதுமேயாகும்.

இரண்டு லிபிகளையும் ஏககாலத்தில் கற்பிக்க வேண்டுமா? அல்லது ஒன்றன்பின் ஒன்றாக கற்பிக்க வேண்டுமா? என்பதை பள்ளிக்கூடங்களே தீர்மானிக்க வேண்டும்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஹிந்துஸ்தானியை மாகாண பாஷை மூலம் கற்பிக்கலாம். உச்சரிப்பு மட்டும் சரியாக இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட இந்த குறிப்பை மகாத்மா காந்தியடிகளுக்கு அனுப்பி வைத்தேன். அவர் பொதுவாக அங்கீகரித்து அரசாங்கங்கள் இப்பொழுது கீழ்க்கண்ட விதியைமட்டும் செய்தால் போதுமென்று எழுதி இருக்கிறார் :—

“ பள்ளிக்கூடங்கள் தங்கள் இஷ்டம் போல் ஹிந்தியோ, உருதுவோ கற்பிக்கலாம். மாணவர்களும் தங்கள் இஷ்டம் போல் ஹிந்தியோ, உருதுவோ கற்காம். ஆனால் இரண்டு லிபியும் கற்றவர்களுக்கே ‘ ஹிந்துஸ்தானி கற்றவர்கள் ’ என்ற யோக்கியதா பத்திரம் அளிக்க வேண்டும். ஹிந்துஸ்தானி கற்றவர்கள் என்ற யோக்கியதா பத்திரம் பெற்றவர்களுக்கே உத்தியோகங்களும், உத்தியோக உயர்வுகளும், வெகுமதிகளும் கிடைக்க வேண்டும்.”

காகா கலேல்கார்.

## பம்பாயில் ஆதிவாசிகள் பிரச்னை

தாணாத் தாலூகாவில் ஆதிவாசிகள் கலகம் நடந்தது. போலீசாரும் ராணுவத்தாரும் அதை அடக்கி அமைதியை உண்டாக்கி விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அதைக் கொண்டு அந்தப் பிரச்னை முடிவடைந்துவிடும் என்று எண்ணிவிட வேண்டாம். சமூகமாகிய உடலில் ஏற்பட்டுள்ள நோய் புறத்தே காட்டும் அறிகுறிகளே அவைகள். இந்த நோயின் மூல காரணங்களை ஒழிக்கவேண்டுமேயன்றி புறத்தே காணும் அறிகுறிகளை நீக்குவதால்மட்டும் பயன் உண்டாகாது.

கலகம் செய்தவர்களாகச் சொல்லப் படுகிறவர்கள் நிரம்பப் பயந்த ஜனங்கள் என்று எல்லோரும் அறிவார்கள். அவர்களுடைய வறுமையும் அறியாமையும் சொல்லுந் தரமல்ல. ஆயிரக்கணக்கான வருஷங்களாக அவர்கள் அரசர்களாலும் நிலச் சுவாந்தார்களாலும் லேவாதேவிக் காரர்களாலும் இவர்களைப் போன்ற பல புல்லுருவிகளாலும் சுரண்டப் பட்டு வந்திருக்கிறார்கள். ஆதிவாசிகள்தான் இந்த நாட்டிலுள்ள நிலம் முழுவதற்கும் சொந்தமானவர்கள். ஆனால் அவர்கள் அதே நிலத்தில் அடிமைகளாக உழைத்து வரும்படி செய்யப் பட்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து நிலத்தைப் பிடுங்கிக் கொண்ட நிலச் சுவாந்தார்களும் லேவாதேவிக் காரர்களும் அவர்களுடைய உழைப்பைக்கொண்டு மனச்சாட்சி ஒப்புக் கொள்ளாத அளவு லாபம் அடைந்து வருகிறார்கள். இப்படி அவர்களைக் கெடுத்து லாபம் அடைவதுடன் அவர்களுக்கு அநீதியும் கொடுமையும் செய்து வருகிறார்கள். இந்தக் காரியங்கள் நடைபெற்று வரும்வரை சாஸ்வதமான அமைதி நிலவும் என்று எதிர்பார்ப்பது வீணாகும்.

இத்தகைய நிலைமை வேறு பகுதிகளிலும் காணப் படுகிறது. சூரத் ஜில்லாவிலும் அதை அடுத்த இந்திய சமஸ்தானங்களிலும “ ராணி பராஜ் ” என்று வழங்கும் ஜனங்கள் அதே பரிதாபகரமான நிலைமையில் இருந்து தவித்துக் கொண்டிருக்கிறார்கள். சூரத்தில் ஹலாப்பதிகள் என்று கூறப்படும் துப்ளா ஜாதியார் ஹாலி முறை என்று சொல்லப் படும் அடிமை முறையிலிருந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கெய்ரா ஜில்லாவிலுள்ள பாராயா ஜாதியாருடைய நிலைமையும் இதுபோலவே தான் இருந்து வருகின்றது. அவர்கள் கலகம் செய்யவில்லை என்றால் அதற்குக் காரணம் அவர்கள் இன்னும் விஷயம் அறியாமல் இருப்பதும் ஒன்று சேர்ந்து காரியம் செய்ய ஏற்பாடு செய்யாமல் இருப்பதுமே யாகும்.

கலகம் செய்தாலும் பலாத்காரத்தை உபயோகிப்பதாலும் இவர்களுக்கோ சமூகத்துக்கோ எந்த விதமான நன்மையும் உண்டாகப் போவதில்லை என்பது உண்மைதான். ஆயினும் அப்படிச் சொன்னால் மட்டும் போதாது. அவர்களிடையே போய் உட்கார்ந்து கொண்டு நிர்மாண வேலை செய்து அவர்களை ஒன்று சேர்ந்து காரியங்கள் செய்யும்படியாக கற்பித்து அவர்களுடைய நிலைமையை மாற்ற நல்ல வழியைக் காட்ட வேண்டும். அவர்கள் கஷ்டங்களைச் சகிக்க முடியாமல் கலகம் செய்ய ஆரம்பித்தார்கள் அதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது ?. இது வரை சுரண்டப்பட்டும் அடக்கப்பட்டும் வந்த ஜனங்கள் விழித்துக்கொண்டு விட்டார்கள். பரிபூரண விடுதலை கிடைக்க வேண்டிய காலமும் பொழுதும் வந்து விட்டன. இனி யாரும் அதைத் தடுத்துவிட முடியாது.

காங்கிரஸ் சர்க்கார்கள் சட்டங்கள் செய்து இவர்களுக்கு உதவிசெய்ய முயன்று கொண்டிருக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் ஊழியர்களும் காங்கிரஸ் காரர்கள் என்று கூறிக்கொள்ளும் நிலச் சுவான்தார்களும் பெரிய விவசாயிகளும் இன்னும் தாங்கள் செய்துவரும் அநீதிகளை உணர்ந்து கொள்ளவில்லையே. சர்க்கார் ஆதிவாசிகளின் நன்மையை உத்தேசித்து குடியானவர் சட்டத்தையும் கடன் நிவாரணச் சட்டத்தையும் செய்திருக்கிறார்கள். அவைகள் நிலச் சுவான்தார்களை அதிகமாகப் பாதிக்கக்கூடியவை அல்ல; அப்படியிருந்தும் அவர்கள் அந்தச் சட்டங்களை அமல் நடத்துவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்யாமல் இருந்து வருகிறார்கள். அவர்கள் தங்கள் நன்மை பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களில் நியாயம் வழங்கத் தயாராக இல்லை. அதிகமான குத்தகைப் பணத்தையோ அல்லது அதிகமான வாரத்தையோ இழக்க நேரும் போது அவர்களுக்கு அடங்காத கோபம் உண்டாய்விடுகிறது. ஆனால் சமூகத்துக்கு எவ்வித சேவையும் செய்யாமல் இருந்து கொண்டு சமூகத்தார் உற்பத்தி செய்யும் செல்வத்தில் பெரும் பாகத்தைத் தங்களுக்கு கேட்கக் கூடிய காலம் மலையேறி விட்டது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இப்பொழுது அவர்கள் தங்கள் பேராசையைத் துறந்து விட்டு தங்கள் பொறுப்பை உணர்ந்து இது வரைத் தாங்கள் யாருடைய உழைப்பால் கொழுத்து வந்தார்களோ அவர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்காக உழைக்க முன் வர வேண்டும். அவர்கள் வசமுள்ள நிலங்களில் பெரும் பகுதி சரியாக உரமிட்டு சரியாகப் பயிர்செய்யப் படாமல் கிடக்கின்றன. பாசனவசதிகளும் இல்லை. நல்ல விதைகளும் உபயோகிக்கப் படவில்லை. இவைகளை எல்லாம் கவனித்து அவர்கள் இதுவரை தங்கள் அடிமைகளாயிருந்த ஏழை ஜனங்களுடன் தோளோடு தோள் நின்று உழைக்கத் தயாராக வேண்டும். அவர்கள் தங்கள் அறிவையும் அனுபவத்தையும் பணத்தையும் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கும் ஜனங்களின் சமூக நிலைமையையும் பொருள் நிலைமையையும் உயர்த்து வதற்கும் உபயோகிக்க வேண்டும். இந்த மாதிரிச் செய்தால் மட்டுமே அவர்கள் மாசூலில் பங்குபெற உரிமை உடையவர்கள் ஆவார்கள்.

காங்கிரஸ் ஊழியர்கள் எல்லாம் சரியாக நடக்கும் என்னும் மனோபாவத்தை விட்டு விட்டு பணக்காரர்களிடம் அவர்கள் செய்து வரும் அநீதிகளை அவர்கள் மனத்தில் பதியும்படியாக எடுத்துரைக்க வேண்டும். அத்துடன் அவர்கள் நிலமில்லாத குடியானவர்களிடம்போய் நிர்மாண வேலை செய்து அஹிம்சா மூலம் எதிர்க்கக்கூடிய சக்தியை உற்பத்தி செய்ய வேண்டும்.

நரஹரி பரீக்

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை